# விழுப்புரம் நகராட்சி

2019–ம் ஆண்டு ஜுன் மாதம் 26–ம் தேதி புதன்கிழமை காலை 10.10 மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற “அவசர கூட்ட” நடவடிக்கைகள்.

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**விழுப்புரம் நகராட்சி.**

## மன்றப்பொருள் –1661

நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண். 48800/2006/எல் நாள்.20.06.2019–ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், **தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி** என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service ) கீழ் தேர்வுநிலை நகராட்சிகளுக்கு ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நகராட்சி கணக்கு அலுவலர் | Municipal Accounts Officer | 1 |
| கணக்கர் | Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

# விழுப்புரம் நகராட்சி

2019—ம் ஆண்டு ஜூன் மாதம் 26—ம் தேதி புதன்கிழமை காலை **10.10 மணிக்கு** விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற **“அவசர கூட்ட”** நடவடிக்கைகள்.

**முன்னிலை :—** **சா.லட்சுமி, எம்.காம்.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## மன்றப்பொருள்

**1.** நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண். 48800/2006/எல் நாள்.20.06.2019—ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், **தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி** என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service ) கீழ் <u>தேர்வுநிலை நகராட்சிகளுக்கு</u> ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நகராட்சி கணக்கு அலுவலர் | Municipal Accounts Officer | 1 |
| கணக்கர் | Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Class II கணக்கர் பணியிடம் ஒன்று மட்டும்

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

**2.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27, வழுதரெட்டி அம்பேத்கார் தெருவில் தேங்கும் மழைநீரை சென்னை திருச்சி நெடுஞ்சாலையின் குறுக்கே Grid Chamber அமைத்து மழைநீரை வெளியேற்ற பணி செய்ய ஒப்பந்ததாரருக்கு உத்தரவு வழங்கிய நிலையில் நெடுஞ்சாலை குறுக்கே பணி செய்ய நெடுஞ்சாலைத் துறையிடம் அனுமதி கோரியதில் கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, விழுப்புரம் அவர்களின் **26.06.2019–**ந் தேதிய கடிதத்தில் சாலை பராமரிப்பு செய்ய ரூ.**138561–**ம் சென்டேஜ் கட்டணமாக ரூ.**16,439–**ம் ஆக கூடுதல் ரூ.**1,55,000/–** (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தைந்து ஆயிரம் மட்டும்) செலுத்த தெரிவித்துள்ளதால், மேற்படி தொகையினை செலுத்தவும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அனுமதி வழங்கலாம். **(6033/2018/இ1)**

**3.** விழுப்புரம் நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணியாட்கள், தலைமைநீரேற்று நிலையத்தில் பணிபுரியும் பணியாட்கள், குடிநீர் பழுது பார்க்கும் பணியாட்கள் அலுவலக பணி செய்யும் தொழில்நுட்ப உதவியாளர்கள் நிலை–II ஆகிய 14 எண்ணிக்கையிலான பணியாளர்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மூலம் மேற்கொள்ள ஏற்படும் மதிப்பீட்டுத் தொகை ரூ.14.90 இலட்சம் செலவினத்தை நகர மன்ற தீர்மான எண்.1445, நாள்.22.02.2019–ல் மன்ற அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து, அன்னை தெரசா சுய உதவிக்குழு மூலம் 6 மாதக் காலத்திற்கு (01.02.2019 முதல் 31.07.2019 வரை) மேற்கண்ட பணியினை மேற்கொண்டு வரும் நிலையில், நகராட்சி பணிகளை மேற்கொள்ள கூடுதல் பணியாட்கள் தேவைப்படுவதால், தற்பொழுது JCB இயக்குபவர், தொழில்நுட்ப உதவியாளர் நிலை–II மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர் ஆகிய 3 நபர்களை மே மாதம் முதல் பணியில் அமர்த்தி மதிப்பீட்டுத் தொகையிலிருந்து ஊதியம் வழங்குவதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மே மாதம் முதல் கூடுதலாக 3 பணியாளர்களை சேர்த்திடவும், ஊதியம் வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1587/2019/இ2)

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**விழுப்புரம் நகராட்சி.**

## <u>மன்றப் பொருள்</u>

விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகளில் உள்ள அனைத்து தெருவிளக்குகளை பராமரிப்பதற்கு நகராட்சியில் போதுமான பணியாட்கள் இல்லாததாலும், Timer Switch இல்லாததாலும் தெருவிளக்குகளை குறித்த நேரத்திற்கு On/Off செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. எனவே, Automatic Timer மூலம் தெருவிளக்குகளை எளிதாக இயக்கம் செய்வதற்கு On/Off Timer Switch சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.40 இலட்சத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 5756/2019/இ2)

விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் அனைத்து குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோகக் குழாய்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால், இப்பழுதினை சரிசெய்வதற்கு உதிரி பாகங்கள் மற்றும் பணியாட்கள் நகராட்சியில் போதுமானதாக இல்லாததால் குடிநீர் பணியானது முற்றிலும் பாதிப்படையும் சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, இப்பழுதினை உடனுக்குடன் சரிசெய்வதற்கு தேவையான உதிரி பாகங்கள் மற்றும் பணியாட்களை சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.60 இலட்சத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொறியாளர் ஆணையாளர் & தனி அலுவலர்

(கோப்பு எண். 5752/2019/இ2)

<u>மன்றப் பொருள்</u>

விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண். 22 முதல் 42 வரை உள்ள பகுதிகளில் அனைத்து குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோகக் குழாய்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால், இப்பழுதினை சரிசெய்வதற்கு உதிரி பாகங்கள் மற்றும் பணியாட்கள் நகராட்சியில் போதுமானதாக இல்லாததால் குடிநீர் பணியானது முற்றிலும் பாதிப்படையும் சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, இப்பழுதினை உடனுக்குடன் சரிசெய்வதற்குத் தேவையான உதிரி பாகங்கள் மற்றும் பணியாட்களை சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.60 இலட்சத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொறியாளர் ஆணையாளர் & தனி அலுவலர்

(கோப்பு எண். 5753/2019/இ2)

<u>மன்றப் பொருள்</u>

விழுப்புரம் நகராட்சியில் தலைமை நீரேற்று நிலையமான எல்லீஸ்சத்திரம் பகுதியில் செல்லும் 350mm dia DI குடிநீர் பிரதானக் குழாய்களில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்யும் பணிக்கு 12.06.2019–ந் தேதியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிக் கோரிய (மதிப்பீட்டை விட –9.96% குறைவு) திவாகர் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணியினை மேற்கொண்டுள்ளார். மேலும், மேற்கண்ட பணிக்கான பட்டியல் தொகை ஒப்பந்தத் தொகையைவிட கூடுதலாகவும், மதிப்பீட்டுத் தொகைக்கு குறைவாகவும் உள்ளது. எனவே, கூடுதலாக செலவிடப்பட்ட தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று கூடுதலாக செலவிடப்பட்ட தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

பொறியாளர் ஆணையாளர் **&**
தனிஅலுவலர்

**(**கோப்பு எண்4326/2019/இ**2)**

<u>மன்றப் பொருள்</u>

விழுப்புரம் நகராட்சி மூன்றாம் நிலை தரம் உயர்த்தப்பட்ட 100 ஆண்டுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து 2011–ம் ஆண்டு நகராட்சியுடன் இணைக்கப்பட்ட 5 ஊராட்சிப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சிறப்பு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இதனால் 5 ஊராட்சி பகுதிகளான 1).பானாம்பட்டு பகுதியில் அமைந்துள்ள இராகவன்பேட்டை, ஆசிரியர் நகரில் 2 – எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறுகள் 2).காகுப்பம் பகுதியில் 2 – எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறுகள் 3).எருமணந்தாங்கல் பகுதியில் 2 – எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறுகள் 4).சாலாமேடு பகுதியில் அமைந்துள்ள திருப்பாச்சனுாரில் 4 – எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறுகள் மற்றும் 5).எல்லீஸ்சத்திரம் பகுதியில் 4 – எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்திட ஏதுவாக தேர்வு செய்யப்பட்ட இடங்களில் நிலத்தடி நீர் ஆய்வு செய்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் Geological Survery எடுப்பதற்கான கட்டணத் தொகை ரூ.2500/– வீதம் 14 எண்ணிக்கையில் புதிய ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைக்க மொத்த தொகை ரூ.35,000/–ஐ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொறியாளர் ஆணையாளர் & தனி அலுவலர்

(கோப்பு எண். 5640/2019/இ2)

## மன்றப்பொருள்

விழுப்புரம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம், காமராஜர் தெரு மற்றும் மந்தக்கரை பகுதிகளில் அமைந்துள்ள உயர்கோபுர விளக்குகள் பழுதடைந்துள்ளதால், இப்பழுதினை சரிசெய்வதற்கு Rope, Pulley, Panel board, Meter box சப்ளை மற்றும் பராமரிப்பு செய்யும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.1,05,**228/– (**ரூபாய் ஒரு இலட்சத்து ஐந்தாயிரத்து இருநூற்று இருபத்தி எட்டு மட்டும்**)** வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது**.**

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **01.04.2019** தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்**.**

பொறியாளர் ஆணையாளர் **&** தனி அலுவலர்

(கோப்பு எண். 3538/2019/இ2)

## மன்றப் பொருள்

விழுப்புரம் நகராட்சி கைபம்பு உதிரி பாகங்கள் சப்ளை செய்யும் பணிக்கு 12.06.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரர் ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன் என்பவர் மதிப்பீட்டு தொகையைவிட 25.57% குறைவாக கோரியதன் முன்னிட்டு நகராட்சி பொறியியல் கையேட்டின்படி சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து 10% தொகையினை கூடுதல் வைப்பு

தொகை செலுத்த தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன் என்பவர் கூடுதல் வைப்பு தொகையாக ரூ.85,000/—ஐ செலுத்தியுள்ளார். மேற்கண்ட பணி முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து ஒப்பந்ததாரர் செலுத்திய கூடுதல் வைப்பு தொகை ரூ.85,000/—ஐ திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் செலுத்திய கூடுதல் வைப்பு தொகை ரூ.85,000/—ஐ திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

பொறியாளர் ஆணையாளர் & தனி அலுவலர்

(கோப்பு எண்.4413/2019/இ2)

<u>மன்றப் பொருள்</u>

விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் எதிர்வரும் சுதந்திர தின விழா 15.08.2019—னை சிறப்பாக கொண்டாடிட ஏதுவாக அலுவலக காந்திசிலை, பி.ஜே.என் ரோடு காந்திசிலை மற்றும் நகராட்சி பூங்காவில் உள்ள காந்திசிலை ஆகிய மூன்று காந்தி மண்டபத்திற்கு அலங்கார விளக்குகள், வண்ணத் தோரணங்கள், மலர்மாலைகள் அணிவித்திடவும், அலுவலக வளாகத்திற்குள் விழா நடைபெறும் இடத்தில் ஒலி ஒளி, வண்ணத்

தோரணம், பந்தல் அமைப்புகள், இருக்கை வசதிகள் மற்றும் விழாவிற்கு வருகை தரும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம், பேனா மற்றும் இனிப்புகள் வழங்கிட ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.50,000/—ஐ வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

பொறியாளர் ஆணையாளர் **&** தனிஅலுவலர்

(கோப்பு எண். 6383/2019/இ2)

<u>மன்றப் பொருள்</u>

விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகளில் தானியங்கி குடிநீர் மையம் அமைக்கும் பணிக்கு 1 முதல் 21 வரை (Package—I), 22 முதல் 42 வரை (Package—II) M/s. Dharana Infrastructure Projects Pvt., Ltd.,AP 887, J Block 1st Street,13th Main Road, Anna Nagar, Chennai–40 என்ற நிறுவனத்திற்கு 15.02.2019—ந் தேதியிட்ட பணி உத்தரவு பெற்று பணியினை துவங்குவதற்கு தெரிவிக்கப்பட்டும், சம்மந்தப்பட்ட நிறுவனம் நேரில் வரவில்லை. எனவே, மேற்கண்ட பணிக்கான பணி உத்தரவை பதிவு தபாலில் உரிய நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி தபாலானது ஒப்படைப்பு செய்யாமல் (Door Locked) மீள வரப்பெற்றது. இதனை தொடர்ந்து அறிவிப்பு கடிதம் மற்றும் இறுதி அறிவிப்பு கடிதங்கள் முறையே 07.05.2019 மற்றும் 14.06.2019—ந் தேதிகளில் அனுப்பி வைக்கப்பட்டும் மேற்கண்ட நிறுவனம் தபால் பெறப்படாமல் மீள நகராட்சிக்கு வரப்பட்டது. எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்திட மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

பொறியாளர் ஆணையாளர் &
தனிஅலுவலர்

(கோப்பு எண்7319/2018/இ2)